# மணிப்பூர் எரிவதை தடுக்க பிரதமர் மோடி விரும்பவில்லை!

## ராகுல் காந்தி கடும் குற்றச்சாட்டு!



புதுடெல்லி,ஆக.12-

நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சு குறித்து கடுமையாக சாடிய காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, நாங்கள் மணிப்பூர் வன்முறை பற்றி கேள்வி கேட்கும் போது, பிரதமர் வெட்கமின்றி நகைச்சுவையுடன் கேலி செய்கிறார் என்று கூறினார்.

மணிப்பூர் வன்முறை குறித்து மக்களவை விவாதத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சு குறித்து டெல்லியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் ராகுல் காந்தி இன்று கடுமையாக விமர்சித்தார். அப்போது அவர் கூறுகையில், “ பிரதமர் நாடாளுமன்றத்தில் நேற்று சுமார் 2 மணி நேரம் 13 நிமிடங்கள் பேசினார். இறுதியில் மணிப்பூர் பற்றி 2 நிமிடங்கள் பேசினார். மணிப்பூர் பல மாதங்களாக எரிகிறது, மக்கள் கொல்லப்படுகிறார்கள். பாலியல் வன்கொடுமைகள் நடக்கின்றன, ஆனால், பிரதமர் சிரித்துக்கொண்டே நகைச்சுவையாகப் பேசுவது அவருக்குப் பொருந்தாது.

மணிப்பூரில் நடந்து வரும் இந்த முட்டாள்தனத்தை இந்திய ராணுவத்தால் இரண்டு நாட்களில் தடுத்து நிறுத்த முடியும். ஆனால், பிரதமர் மணிப்பூரை எரிக்க விரும்புகிறார், தீயை அணைக்க விரும்பவில்லை” என்றார்.

தொடர்ந்துப் பேசிய ராகுல், “பிரதமரின் பேச்சு இந்தியாவைப் பற்றியது அல்ல, அது நரேந்திர மோடியைப் பற்றியது. அவர் தனது கருத்துக்கள், தனது அரசியல் மற்றும் லட்சியங்களைப் பற்றி பேசினார். நமது கேள்வி 2024ல் அவர் பிரதமராவது பற்றி அல்ல, கேள்வி மணிப்பூர் பற்றி எரிகிறது என்பதைப் பற்றியது. பிரதமர் குறைந்தபட்சம் மணிப்பூருக்குச் செல்லலாம். அங்குள்ள சமூகங்களுடன் பேசலாம், நான் உங்கள் பிரதமர் என்று சொல்லலாம், பேச ஆரம்பிக்கலாம். ஆனால் அவருக்கு எந்த நல்ல நோக்கமும் இல்லை.

மணிப்பூரில் எந்த பேச்சு வார்த்தையும் இல்லை, மணிப்பூரில் முழுமையான வன்முறை நடக்கிறது. முதல் படியாக வன்முறையை நிறுத்தி அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அவர் எதுவும் செய்யாமல் வெட்கமின்றி சிரிக்கிறார்” என்று ராகுல் காந்தி கூறினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.8.2023) சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.50 இலட்சம் செலவில் முழு உடல் பரிசோதனை மையத்தில் இருதய நோய் சிறப்பு பரிசோதனை ”TREAD MILL TEST சேவையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு அரசு முதன்மைச் செயலாளர் ககன் தீப்சிங் பேடி, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை முதல்வர் மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை நிலைய மருத்துவ அலுவலர் மரு.சுப்பிரமணி, துறை பேராசிரியர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ. முயற்சியால் - திரு.வி.க.நகர் தொகுதி

# அருந்ததியர் நகரில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பணியினை தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஆக.12-

முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்று வருகின்ற மக்கள் நலத்திட்டங்களில் மேலும் ஒரு சாதனையாக திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் அருந்ததியர் நகர் பகுதியில் பல ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டுள்ளது. சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வருகின்ற 14.08.2023 அன்று காலை 9 மணிக்கு இந்த பணியினை தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் கடந்த 17-04-2023 அன்று இன்றைய தொழில்துறை அமைச்சரும், அன்றைய மதிப்பீட்டு குழுவின் தலைவருமான டி.ஆர்.பி.ராஜா தலைமையில் மதிப்பீட்டுக் குழு கூட்டம் நடைபெற்றது. அனைத்து துறை சார்ந்த உயர் அதிகாரிகள் பங்கேற்ற அக்கூட்டத்தில் மதிப்பீட்டு குழுவின் உறுப்பினராக இருந்த கழக துணை அமைப்பு செயலாளரும், திரு.வி.க.நகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ப.தாயகம்கவி திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண் 71-ல் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் அருந்ததியர் நகர் பகுதியில் உள்ள செங்கன் தெரு, கந்தன் தெரு, வீரராகவன் தெரு, கோவிந்தன் தெரு, கோவிந்தபுரம், போலேரியம்மன் கோவில் தெரு, தாசரி தெரு, எலிகன் தெரு, பங்காரு தெரு, ரங்கப்பன் தெரு, வரதப்பன் தெரு பெரியபாளையத்தம்மன் கோவில் தெரு உப்பண்டிபாபு லேன், சின்னையா லேன், பிச்சாண்டி தெரு ஆகிய தெருக்களில் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவதை சரி செய்து அப்பகுதியில் வசித்து வருகின்ற மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்கின்ற வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைத்தார். கோரிக்கையினை விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்று மதிப்பீட்டு குழு குறிப்பாணை வழங்கியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர்,சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் ஆகியோரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.வி.க.நகர் தொகுதி அருந்ததியர் நகர் பகுதியில் மேற்குறிப்பிட்ட தெருக்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் மேற்பார்வை பொறியாளர், பகுதி பொறியாளர்-6. துணை பகுதி பொறியாளர் மற்றும் பணிமனை 71-ன் உதவி பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் அடிப்படையில் 8,390 மக்கள் தொகையும், 400 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ள அந்தப்பகுதியில் குடிநீர் தரத்தின் நிலைTDS (*total dissolved solids*) - 500 ppm-க்கும் குறைவாக இருக்குமாறு பராமரிக்கப்பட்டு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 25 வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் என்பதால் அவை முற்றிலும் பழுதடைந்து விட்டது. எனவே, பழைய குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு புதிய குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 4.02 கோடி திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதனை தொடர்ந்து ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு பணியானை வழங்கப்பட்டிருக்கிறது. கொரோனா காலகட்டத்திற்குப் பின் உலக அளவில் பொருளாதார வீழ்ச்சி அடைந்த நிலையிலும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் மக்களின் நலனில் அக்கறை கொண்டு மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வரும் நிலையில், திரு.வி.க. நகர் தொகுதியிலும் மக்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடங்கப்படுவதற்கான பணியானை வழங்கப்பட்டு விரைவில் புதிய குழாய் பதிக்கப்படும் பணி தொடங்கவுள்ளது. அரசு மதிப்பீட்டு குழு கூட்டத்தில் அக்குழுவின் உறுப்பினர் என்கிற நிலையில் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அவர்கள் வைத்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாக பாதிக்கப்பட்ட பழைய குழாய்களை அகற்றி விட்டு எதிர்காலத்தில் எந்த பழுதும் ஏற்படாதவாறு புதிய குடிநீர் குழாய்கள் அமைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

### முன்னிலை: அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி.! தலைமை : ராஜேஷ் ஜெயின் எம்.சி.

# துறைமுகம் மேற்கு பகுதியில் - வட இந்தியர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## பி.பியாரிலால் ஜெயின், அபய ஸ்ரீஸ்ரீமல் ஜெயின் வழங்குகிறார்கள்!

சென்னை, ஆக 12-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதியில் கலைஞர் 100, 26வது நிகழ்ச்சியாக “அண்ணாவின் இதயமானவர்! அனைவர்க்கும் உதயமானவர்! எனும் தலைப்பில் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், சென்னை, சௌகார்பேட்டை, அண்ணாபிள்ளை தெரு, சந்திரபுரி ஜெயின் பவனில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவிற்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் ராஜேஷ் ஜெயின்,எம்.சி., தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு, என். பி.எம். ஷேக் அப்துல்லா, ஜி.எம்.தேவன், எம்.இப்ராஹிம் கனி, மே.ஜனார்த்தனம், கே.ஆர். அபரஞ்சி, ம. முத்துகுமார், கே.சரஸ்வதி, எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், பி.விஜயகுமார், க. பா.பிரதீப்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். சி.ப. ஜெயராமன், செ. தமிழ்வாணன், எஸ்.சந்தியாகு, ந.சுந்தரம், வெ.பரிமளம், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதிஷ்குமார், சேப்பாக்கம் வே. பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, அ.நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் திரு.பியாரிலால் ஜெயின், தொழிலதிபதிரும், சமூக கல்வியாளருமான அபய ஸ்ரீஸ்ரீமல் ஜெயின் ஆகியோர் வட இந்தியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், கே. எஸ்.ரவிச்சந்திரன், பி. கே.மூர்த்தி, தமிழன் பிரசன்னா, சங்கர் நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், வே. உமாகாந்தி, பரிதிஇளம்சுருதி, கே.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், சரிதா மகேஷ்குமார், கூ.பி.ஜெயின், சொ. வேலு, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், டி. எஸ்.பி. ராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, சொ.வேலு, வி.சுதாகர், ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

57 வட்டக் கழக செயலாளர்கள் ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

